सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை - நிகழ்வுகள்

இந்திய சுதந்திர தினத்தின் 70ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டும் யாழ் இந்திய துணைத் தூதரகமானது கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

*1)* ***12 ஆகஸ்ட் 2017*** : MOM (தமிழாக்கம்) திரைப்படம் ராஜா திரையரங்கு – 2 இல் மதியம் 2.30 மணிக்கு பொதுமக்களுக்காக இலவசமாக திரையிடப்படும்

*2)* ***16 ஆகஸ்ட் 2017*** : இந்தியா பெங்களூரைச் சேர்ந்த மஞ்சுநாத் சகோதரர்களின் வயலின் இசை கச்சேரி மாலை 6.30 மணிக்கு நல்லூர், சங்கிலியன் தோப்பில் இடம்பெறும். (அனுமதி இலவசம்)

***17 ஆகஸ்ட் 2017*** : இசை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கென பிரத்தியேகமாக நடாத்தப்படும் மஞ்சுநாத் சகோதரர்களின் வயலின் பயிற்சிப்பட்டறையும் வயலின் இசைக்கச்சேரியும் வவுனியா ஸ்ரீ கந்தசாமிகோவில் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெறும். (அனுமதி இலவசம்)

*3)* ***12–21 ஆகஸ்ட் 2017:*** யாழ் இந்திய துணைத் தூதரகத்தினதும் யாழ்ப்பாண மாநகர சபையினதும் ஏற்பாட்டில் பத்து நாட்கள் தொடர் புத்தகக் கண்காட்சி நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனையில் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை இடம்பெறும். இங்கு இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த கவிதா பதிப்பகம் (இந்தியா), கற்பகம் புத்தகாலயம் (இந்தியா), அருணா பதிப்பகம் (இந்தியா), பூபாலசிங்கம் புத்தகசாலை(இலங்கை) ஆகியவற்றின் பல்துறை சார் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படும்

*1 ஆகஸ்ட் 2017*